DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 69/2025

Prosecution PW -2

| | | |
|---|---|---|
| Name | Thambirajan | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 08.10.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தேவனாம்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நான் தேவனாம்பட்டினத்தில் நான் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் அவருக்கு ரகசிய தகவலாளி போன் மூலம் வள்ளுவர் சுடுகாட்டில் 3 நபர்கள் கஞ்சா விற்பனை செய்வதாகவும் வந்தால் அடையாளம் காட்டுவதாக கூறிய ரகசிய தகவலை பெற்று உதவி ஆய்வாளர் பொது நாட்குறிப்பில் பதிவு செய்து, காவல் ஆய்வாளருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று, நிலையத்தில் இருந்த என்னையும் தலைமை காவலர்கள் சுரேஷ்குமார், சாமிநாதன் ஆகியோரை கஞ்சா வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் இரண்டு இருசக்கர வாகனங்களில் புறப்பட்டு 11.00மணிக்கு சம்பவ இடமான தேவனாம்பட்டினம் வள்ளுவர் சுடுகாடு அருகில் சென்று கண்காணித்தபோது, அங்கு இருந்த தகவலாளி உதவி ஆயவாளர் அவர்களிடம் அங்கு இருந்து 3 நபர்களை அடையாளம் காட்டிவிட்டு சென்றுவிட்டார். அந்த 3 நபர்கள் போலிசாராகிய எங்களை பார்த்ததும்தப்பி ஓட எத்தனித்தார்,அவர்களில் ஒருவரை மடக்கி பிடித்தோம். மற்ற இருவர்கள் தப்பியோடிவிட்டார்கள். பிடிப்பட்ட நபரை விசாரிக்க அவர் தன் பெயர் ரமணா என்றும், தப்பியோடியவர் பெயர் நிவாஸ், ராஜேஷ் என்றும் பெயர், விலாசத்துடன் கூறினார். மேற்படி நபரிடம உதவி ஆய்வாளர் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக நம்ப தகுந்த தகவல் வந்துள்ளது என்றும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்று சொன்னார். அவ்வாறு சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சோதனை நமுனா சார்வு செய்தார். அந்த சோதனை நமுனா அ.த.சா.ஆ.**1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1வது எதிரி அவ்வாறு அழைத்து செல்ல தேவையில்லை, நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அதை உதவி ஆய்வாளர் எழுத்து மூலம் எழுதி அந்த நபரிடம் கையெழுத்து வாங்கினார். அந்த சோதனை சம்மத கடிதம் அ.தசா.ஆ**-2** ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. பின்னர், எதிரியை சோதனை செய்ய பச்சை நிற பையில் , காய், பூக்கள், விதை இலையுடன் கூடிய பொருள் இருந்தது. அதை சிறிதளவு

எடுத்து உதவி ஆய்வாளரும், நாங்களும் முகர்ந்து பார்க்க கஞ்சா வாடை வீசியது. மேலும் அந்த பையை 20 சிறு சிறு பிளாஸ்டிக் பையில் கஞ்சா இருந்தது. அந்த 20 சிறு சிறு பொட்டலத்தையும் , பையில் இருந்த கஞ்சாவோடு கொட்டி ஒன்றாக்கப்பட்டது. அந்த கஞ்சாவை வைத்திருக்க எதிரிக்கு அனுமதியோ உரிமையோ இல்லை என்று காரணம் கூறி உதவி ஆய்வாளர் 12.30மணிக்கு கைது நமுனா சார்வு செய்து, எதிரியை கைது செய்தார். அந்த கைது நமுனா அ.தசா.ஆ.**-3**ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டது. எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் எடுத்து சென்ற Electronic தராசில் எடை போட்டு பார்க்க 1.200 கிலோ இருந்தது. பின்னர், வெள்ளை நிற பையில் இருந்த கஞ்சாவை மஞ்சள் நிற பைக்குள் வைத்து நூலால் கட்டி, SHO சீல் வைத்து சாட்சிகளிடமும் எதிரியிடமும் கையொப்பம் வாங்கினார். உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்தார். பின்னர் கஞ்சாவை கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் சுரேஷ்குமார், சாமிநாதன் முன்னிலையில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்று உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்தார். மேற்படி நடவடிக்கை முழுவதையும் நான் என்னுடைய Unicon செல்போனில் வீடியோ கவரேஜ் செய்தேன். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதை போலிஸ் சாட்சிகள் சுரேஷ்குமார், சாமிநாதன் முன்னிலையில் மதியம் 1.30 மணி முதல் 2.30மணிவரை உதவி ஆய்வாளர்பதிவு செய்தார். பின்னர் 15.00 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து 1 முதல் 3 எதிரிகள் மீது உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண். 10/2025, பிரிவு 8(c),20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் நான் என்னுடைய மொபைல் போனில் பதிவு செய்த வீடியோ கவரேஜ் செய்தது சம்மந்தமாக பிரிவு 63(4)(C)BSAன் கீழ் Part-Aசான்று வழங்கினேன். அந்த சான்று அ.த.சா.ஆ.**6**.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

நான் என்னுடைய செல்போனில் வீடியோ கவரேஜ் செய்து நிலையம் வந்து நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். அ.த.சா.ஆ.6 ல் தேதி, நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6 ல் நான் புகைப்படம் எடுத்த மொபைல் போன் எந்த நிறுவனத்தை சேர்ந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கவரேஜ் செய்த வீடியோ முழுவதுமாக எடுக்கவில்லை இடையில் நிறுத்தி நிறுத்தி எடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 3 மணி நேரம் இருந்தேன். சம்பவம ஆரம்பம் முதல் இறுதிவரை வீடியோ கவரேஜ் செய்ய எனது மொபைல் போனில் ஸ்டோரஜ் இருக்காது என்றால் சரியல்ல. நான் வீடியோ கவரேஜ் செய்த செல்போனை உடனடியாக உதவிஆய்வாளரிடம ஒப்படைக்கவில்லை அவர் வெளிவேலைக்கு சென்றதால் நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன்.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
(ஒ/ம்,G.சுந்தரராஜ்ன, B.Sc.,B.L.)

கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்